உடமைகளையும் பாதுகாப்பதே எங்கள் அரசின் தார்மீகக் கடமை என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஏற்கெனவே இம்மாமன்றத்திற்கும் தமிழக மக்களுக்கும் தெரிவித்துள்ளேன்.

சமீப காலமாக நடைபெற்று வரும் கோவில் திருட்டுகளையும் சிலை உடைப்புகளையும், நான் உன்னிப்பாக கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். இதனை முற்றிலுமாக தடுத்து நிறுத்த, நிரந்தரமாக ஒரு சிறப்பு ஏற்பாட்டைச் செய்ய வேண்டியது மிகவும் அவசியம் என்று கருதுகிறேன். இந்த சிறப்பு ஏற்பாட்டினைக் குறித்து, விரைவில் ஆய்ந்து முடிவு செய்து வருகிற 9 ஆம் தேதி இந்து அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு என்னுடைய பதிலுரையில் அதனை அறிவிக்க உள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ராமசுப்பு அவர்களும் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் பேசுகின்றபோது அரசியல் காரணங்களுக்காக இந்தக் கோயில் திருட்டுச் சம்பவங்களும் திட்டமிட்ட செயல்களாக இருக்குமோ என்ற ஐயப்பாட்டினையும் இங்கே தெரிவித்தார்கள். இதுவும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல இத்தகைய கோயில் திருட்டுகள், சிலை உடைப்புகள், காவலர்கள் கொலை போன்ற குற்றங்களை முற்றிலுமாக தடுப்பதற்கு ஒரு நிரந்தரமான ஏற்பாட்டினை நான் இப்பொழுது உருவாக்கி வருகிறேன். இதனைப் பற்றி தீவிரமாக ஆராய்ந்து வருகிறேன்.

எனவே, அதைப் பற்றிய விவரங்களை வருகிற 9 ஆம் தேதி என்னுடைய பதில் உரையில் தெரிவிக்கிறேன் என்பதை மட்டும் இந்த நேரத்தில் கூறிக்கொண்டு அமைகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் உரைக்குப் பிறகு என்ன ?

(ஆ) டாக்டர் அம்பேத்கார் பிறந்த நாளையொட்டி 14-4-1992 ஆம் நாளன்று விடுமுறை அறிவிக்கப்பட வேண்டியது குறித்து.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வருகிற 14 ஆம் தேதி டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மத்திய அரசு விடுமுறை நாளாக அறிவித்துள்ளதுபோல தமிழக அரசும் வருகிற 14 ஆம் தேதி அன்று விடுமுறையாக அறிவிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திடீரென்று கேட்டீர்களானால் எப்படி? அதை ஆய்வு செய்து முடிவு சொல்வார்கள்.

3. கவனஈர்ப்பு

(அ) மதுக்கரை சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் புகையினால் ஏற்படும் பாதிப்பு குறித்து,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவனஈர்ப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,** என்று சொன்னது, ஒருவேளை தவறான ஒரு கருத்தை உருவாக்கிவிடும் என்பதால் அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்திரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்** என்று சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் திரு. கே. செல்வராஜ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்.

முற்பகல் 10-45

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கோயம்புத்தூர் மதுக்கரை சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் புகையினால் ஏற்படும் பாதிப்பு'' குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப் பட்டிருக்கிறது.

விவர அறிக்கை.

திருவாளர்கள் அசோசியேட்ட் சிமெண்ட் கம்பனீஸ் லிமிடெட், கோயம்புத்தூர் 1934-ஆம் ஆண்டு முதல் செயல் பட்டு வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.